# சபை—தேவ மக்களின் சமுதாயம்

Transcribed and edited for clarity from a message spoken in May, 2014 in Chennai

By *R.S.Milton*

புதிய ஏற்பாட்டில் *சபை* என்ற ஒரு காரியம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டைக் கொஞ்சம் வாசித்தவுடன் *சபை*யைப்பற்றி நமக்குத் தெரியும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், உண்மை யிலேயே புதிய ஏற்பாட்டில் *சபை* என்பதைப்பற்றிய நம் புரிந்துகொள்ளுதல், நம் வெளிச்சம், நம் வெளிப்பாடு மிகவும் குறைவானது. "புதிய ஏற்பாட்டிலே சபை என்றால் என்ன, சிலுவை என்றால் என்ன, உயிர்த்தெழுதல் என்றால் என்ன, இரட்சிப்பு என்றால் என்ன, பாவமன்னிப்பு என்றால் என்ன, பரலோகம் என்றால் என்ன, புதிய எருசலேம் என்றால் என்ன, பரிசுத்த ஆவியின் கொடைகள் என் றால் என்ன," என்பதுபோன்ற தத்துவக் கேள்விகளுக்குப் பதில் கிடைக்க வேண்டும் என்பதற்காக நாம் புதிய ஏற்பாட்டை வாசிக்கக்கூடாது. "உண்மையிலேயே இந்த உண்மைகள் என் வாழ்க்கையை ஆசீர்வாதமுள்ள வாழ்க்கையாக மாற்றும். இவைகள் எனக்குத் தெரியவில்லையென்றால் என் வாழ்க்கை ஆசீர்வாதமற்ற வாழ்க்கையாக முடிவடைந்துவிடும்" என்ற நோக்கத்திற்காகத்தான் நாம் தேவனுடைய வார்த்தையை, குறிப்பாக, புதிய ஏற்பாட்டை கருத்துடன் வாசிக்க வேண்டும்.

### *சபை ஒரு சமுதாயம்*

நாம் வாழ்கிற இந்தக் காலகட்டத்தில் தேவனுடைய மக்கள் *சபை*யைப்பற்றி பல்வேறுவிதமான கருத்துக்களையும், பழக்கவழக்கங்களையும் வைத்திருக்கிறார்கள். நம்மை அறியாமல் நாமும் அந் தக் கருத்துக்களையும், பழக்கவழக்கங்களையும் நமக்குள் ஏற்றுக்கொள்வோம். நாம், "ஆண்டவரே, உம் இருதயத்தின்படி சபை என்றால் என்னவென்று எனக்குக் காண்பியும். இது தெரிந்தால் எனக்கு என்ன ஆசீர்வாதம்? தெரியாவிட்டால் என்ன ஆசீர்வாதக் குறைச்சல் என்று எனக்குக் காண்பியும்," என்று நாம் தேவனிடத்தில் ஜெபிக்க வேண்டும். ஒருவேளை ஒரு காரியம் எனக்குத் தெரிந்தால் எனக்குப் பல இலட்சம் ரூபாய் கிடைக்கும் என்றால் எப்பாடு பட்டாவது நான் அந்தக் காரியத்தைத் தெரிந்துகொள்வேன். ஆனால், தேவனுடைய எண்ணத்தைப் பொறுத்தவரை, தேவனுடைய இரு தயத்தைப் பொறுத்தவரை, சபை என்றால் என்னவென்று தேவனுடைய மக்களுக்குத் தெரியவில்லை. இது தெரியாததால் அவர்கள் தங்கள் வாழ்வில் மிகப் பெரிய ஆசீர்வாதத்தை இழந்துவிடுகிறார்கள்.

சபை என்பது நாம் எப்போதெல்லாம் கூடிவருகிறோமோ அப்போது மட்டும்தான் இருக்கிறதா அல் லது நாம் கூடிவரும்போது மட்டும் அல்ல, வருடத்தின் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் இந்தப் பூமியில் சபை இருக்கிறதா? சபை என்பது அவ்வப்போது தோன்றி மறைகிற ஒன்றா அல்லது எப் போதும் இருக்கிற ஒன்றா என்பதுதான் கேள்வி. கூடுகை என்பது எப்போதும் இருப்பதல்ல. கூடி வரும்போது கூடுகை இருக்கிறது. கூடிவராதபோது கூடுகை இல்லை. ஆனால், சபை எப்போதும் இருக்கிறது. எனவே, நான் ஒரு வார்த்தையை முன்வைக்கிறேன்-*சமுதாயம்*.

ஒரு சமுதாயம் என்பது மக்கள் கூடிவாழ்கிற ஒரு வாழ்க்கை. மக்கள் ஓர் ஊரிலோ, நகரத்திலோ, நாட்டிலோ ஒரு சமுதாயமாக வாழலாம். ஒரே ஊரிலேகூட ஒரே தொழில் செய்கிறவர்களெல்லாம் ஒரு சமுதாயமாக வாழ்வார்கள். ஆகவே, இந்தப் பூமியிலே, தேவனுடைய மக்கள் ஒரு சமுதாயமாக வாழ வேண்டும் என்பது தேவனுடைய எண்ணம், தேவனுடைய விருப்பம். சபை என்பது தேவனுடைய மக்களாலான ஒரு சமுதாயம். ஒரு சமுதாயம் என்றால் கூடுகைகள் இருக்கும். கூடிவாழும்போது இரண்டு காரியங்கள் நடைபெறும். ஒன்று, அங்கு நிறைய கொடுக்கல்வாங்கல்கள், பண்டமாற்றங்கள், பரிமாற்றங்கள், இடைப்பாடுகள் இருக்கும். ஒரு வீட்டில் நல்ல காரியமோ, துக்க காரியமோ நடக்கிற தென்றால் அதில் பங்குபெறுவதற்கு அந்தத் தெருவிலுள்ளவர்களெல்லாம் வருவார்கள். தங்கள் வளங்களைப் பரிமாறிக்கொள்வார்கள். தங்கள் தேவைகளுக்கு பிறருடைய உதவியை நாடுவார்கள். மக்கள் குகைகளில் தனித்து, தனியாக, வாழ்ந்தால் இப்படிப்பட்ட பரிமாற்றங்கள், கொடுக்கல் வாங்கல்கள், இடைப்பாடுகள் இருக்காது.

### சமுதாய வாழ்க்கை

**உ**ண்மையிலேயே தேவனுடைய வார்த்தையைப் பொறுத்தவரை சமுதாய வாழ்க்கை என்றால் என்ன? தேவ மக்களுடைய சமுதாயம்தான் சபை. தேவ மக்களுடைய சமுதாயம், பரிசுத்தவான் களுடைய சமுதாயம். இதுதான் சபை. எனவே, இதை சபை என்றும் சொல்லலாம், தேவ மக்க ளுடைய சமுதாயம் என்றும் சொல்லலாம்.

ஒரு சமுதாயத்தில் இரண்டு காரியங்கள் நடைபெறும். ஒன்று, கொடுக்கல்வாங்கல்கள், பரிமாற்றங்கள். இடைப்பாடுகள். இன்னொன்று, அந்தச் சமுதாயத்தில் கூடுகைகளும் இருக்கும். ஒரு குடும்பம் என்பது 24 மணி நேரமும் இருக்கிறது. 24 மணி நேரமும் அது குடும்பம்தான். ஆனால், நாம் காலையில் வெளியே போய்விட்டு மாலையிலோ அல்லது இரவிலோ வீடு திரும்புகிறோம். காலையிலும் மாலையிலும் நாம் சேர்ந்து சாப்பிடுகிறோம். இது ஒரு கூடுகைக்குச் சமானம். ஒரு நல்ல குடும்பம் என்றால் அந்தக் குடும்பத்திலுள்ளவர்களெல்லாம் ஒரு நாளில் ஒருமுறையாவது கூடிவர வேண்டும். ஒரு குடும்பத்திலுள்ள நல்ல பழக்கவழக்கங்களை வைத்துத்தான் ஒரு குடும்பத்தின் தரத்தை மதிப்பிட முடியும். குடும்பத்திலுள்ள பெற்றோர்களும், பிள்ளைகளும் ஒருநாளில் ஒருமுறை கூட கூடிவரவில்லையென்றால் அந்தக் குடும்பத்தின் தரம், பண்பாடு, மிகவும் தாழ்வானது என்று நாம் சொல்லலாம்.

ஒரு சமுதாயத்தில் கொடுக்கல்வாங்கல்களும் இருக்கும், கூடுகைகளும் இருக்கும். ஆனால், கூடுகைகள் இருப்பதால் மட்டுமே அது சமுதாயமாக மாறிவிடாது. எபேசுவில் அப்போஸ்தலனாகிய பவுல் சுவிஷேத்தை அறிவித்தபோது அங்கிருந்த வெள்ளிக் கொல்லர்களெல்லாம் ஒன்றுகூடி பவுலை ஒழித்துவிடவேண்டும் என்று கூச்சல் போட்டார்கள். "எபேசியரின் தியானாளே சிறந்தவள், உயர்ந்தவள், பெரியவள்" (அப். 19:28) என்று அவர்கள் சத்தமிட்டார்கள். இது அவர்களுடைய கூடுகை. ஆனால், இதை சமுதாயம் என்று சொல்லமுடியாது. அதுபோல தேவனுடைய மக்களிடையே கூடுகைகள் இருக்கலாம். ஆனால், சமுதாயம் இல்லாமல் போக வாய்ப்புண்டு.

### நவீன காலத்துக் கூடுகைகள்

இந்த நவீன காலத்தில், தேவ மக்களின் கூடுகைகளில், நான் ஒரு காரியத்தைப் பார்க்கிறேன். குளிர்சாதன வசதியுள்ள பெரிய அரங்கங்களைக் கட்டியிருக்கிறார்கள். அங்கு திரளான மக்கள் போகிறார்கள். அவர்கள் வேதாகமத்தையோ, பாட்டுப் புத்தகத்தையோ கொண்டுபோக மாட்டார்கள். பாட வேண்டிய பாட்டு அங்கு பெரிய திரையில் ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் பாட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், பாடுவதற்கு ஒரு பாடகர் குழு இருக்கும். அவர்கள் பாடுவதை அங்கு அமர்ந்து ரசித்தால் போதும். "நாமும் பாடினால் நன்றாக இருக்குமே" என்று நினைத்தால் பாடலாம். பாடவில்லையென்றால் யாரும் எதுவும் கேட்கமாட்டார்கள். பாடல்கள் முடிந்தபின் ஒருவர் பிரசங்கம் பண்ணுவார். அவர் பிரசங்கம்பண்ணும்போது அங்கு திரையில் குறிப்புகள் போய்க் கொண்டிருக்கும். அவர் எந்தெந்த வசனங்களை மேற்கோள் காட்டுகிறாரோ அவைகள் அங்கு திரையில் காண்பிக்கப்படும். இரண்டு மணி நேரத்துக்குப்பின் போய்விடலாம். உள்ளே வரும்போது உங்களை வரவேற்க வாசலில் ஆட்கள் இருப்பார்கள். போகும்போது வழியனுப்ப ஆட்கள் இருப்பார்கள். கைகுலுக்கி விடை கொடுத்தனுப்புவார்கள். இந்த இரண்டு மணி நேரத்தோடு அந்த வாரத்தில் அவர்களுடைய கிறிஸ்தவ வாழ்க்கை முடிந்துவிட்டது. இது கூடுகை, சமுதாயம் அல்ல.

நீங்கள் புதிய ஏற்பாட்டை, குறிப்பாக, அப்போஸ்தலர் நடபடிகளையும், கடிதங்களையும் வாசித்துப் பாருங்கள். அவைகளை வாசிக்கும்போது தேவனுடைய மக்கள் வெறுமனே கூடுகைகளை நடத்தினார்களா அல்லது சமுதாயத்தைக் கட்டியெழுப்பினார்களா என்று தெரிந்துவிடும். கூடுகைகள் நடத்தப்படுகின்றன. சமுதாயமோ கட்டியெழுப்பப்படுகின்றது. 2 மணி நேரம் அல்லது 3 மணி நேரம் அல்லது ஒருநாள் ஒரு கூடுகையை நடத்துவது எளிது. இந்தக் கூடுகைகளுக்குப் பல பெயர்கள் கொடுத்துக்கொள்ளலாம். Sunday Worship, One Day Workshop, Two Days Seminar, Three Days Conference, One Week Training, One Month Summer School. பலவிதமான பெயர்கள்! இவைகள் கூடுகைகள்! ஆனால், ஒரு குடும்பத்தைக் கட்டியெழுப்புவதற்கு நாம் எல்லாவற்றையும் தியாகம் செய்வதுபோல, சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் எல்லாவற்றையும் தியாகம் செய்ய வேண்டும்.

பணம், படிப்பு, வீடு போன்ற பல காரியங்கள் இந்த உலகத்தில் நம் பிள்ளைகளுக்கு நாம் விட்டுப் போகிற பெரிய சொத்து என்று நாம் நினைக்கலாம். ஆனால், தேவ மக்களாலான ஒரு சமுதாயம்தான், உண்மையிலேயே, நாம் இன்னொரு தலைமுறைக்கு விட்டுப்போகிற மாபெரும் சொத்து. இது இன்றைக்கு நமக்குத் தெரியாது. அவர்கள் தேவ மக்களாலான ஒரு சமுதாயத்தில் வாழ்ந்தால் அவர்களுடைய வாழ்க்கை ஆசீர்வாதமான வாழ்க்கையாக இருக்கும். அப்படி வாழவில்லையென்றால் அவர்களுடைய வாழ்க்கை ஆசீர்வாதமற்ற வாழ்க்கையாக இருக்கும்.

ஒரு சமுதாயம் ஏன் அவசியம் என்று தேவன் நினைக்கிறார் அல்லது தேவனுடைய மக்கள் ஏன் ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும், ஒரு சமுதாயமாக வாழ வேண்டும், என்று தேவன்

விரும்புகிறார் அல்லது தேவன் விரும்புகிற சமுதாயம் எப்படி இருக்கும்? இதற்கான சில காரணங் களை நான் சொல்லுகிறேன்.

**கிறிஸ்துவை மையமாகக்கொண்ட சமுதாயம்**

ஒன்று, அது கிறிஸ்துவை மையமாகக்கொண்ட சமுதாயம். இரண்டு, அது பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற சமுதாயம். மூன்று, அது பரிபூரணம் நிறைந்த சமுதாயம். நான்கு, அது பரிவு நிறைந்த சமுதாயம். ஐந்து, அது பகிர்ந்துகொள்கிற சமுதாயம். ஆறு, அது பொறுப்புள்ள சமு தாயம். ஏழு, அது பொறுமையுள்ள சமுதாயம். இந்த ஏழு குறிப்புகளாகத்தான் சொல்ல வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒருவேளை கொஞ்சம் சிந்திப்பதற்கும், ஜெபிப்பதற்கும் நேரம் செல வழித்தால் இந்த ஏழு குறிப்புகளை ஐந்தாகக் குறைத்துவிடலாம் அல்லது இன்னும் 2 அல்லது 3 குறிப்புகளைச் சேர்க்கலாம் அல்லது இதற்குப்பதிலாக வேறு தலைப்புகளைச் சொல்லலாம்.

எதை மையமாகக்கொண்டு நாம் சமுதாயமாக வாழ்கிறோம்? "எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" (1 யோவான் 1:3) என்று அப் போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார். புதிய ஏற்பாட்டில் ஐக்கியம் என்பது இன்னொரு அற்புத மான வார்த்தை. ஐக்கியம் என்பதற்கு மூலமொழியாகிய கிரேக்க மொழியில் koinonia என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைக்குப் ***பொதுவாக வைத்து அனுபவித்தல்*** என்று பொருள். ஓர் ஊரில் பொதுக்கிணறு இருந்தால், அந்த ஊரிலுள்ள மக்களெல்லாரும் அந்தக் கிணற்றுத் தண்ணீரைப் பயன்படுத்துவார்கள். அப்போது, அவர்கள் இந்தக் கிணற்றைப் பொதுவாக வைத்து அனுபவிக்கிறார்கள் என்று சொல்லலாம். அதுபோல, தேவனுடைய மக்களாகிய நாம் ஒரு மாபெரும் பொருளைப் பொதுவாக வைத்து அனுபவிக்கிறோம். இந்த மாபெரும் பொருள் கிறிஸ்து. முதலாவது தேவனுடைய மக்கள் எல்லாரும் பொதுவாக அனுபவிப்பது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. மக்கள் எப்படித் தண்ணீரை, காற்றை, பொதுவாக வைத்து அனுபவிக்கிறார்கள். அதற்கும் அப்பாற்பட்டு இந்த உலகத்தில் மக்கள் பல்வேறு தளங்களை மையமாகக்கொண்டு கூடி வருகிறார்கள். ஊர், மொழி, படிப்பு, ஜாதி, தொழில் போன்றவைகளைக்கொண்டு மக்கள் சமு தாயத்தை உருவாக்குகிறார்கள். இன்றைக்கு 'சங்கம்' என்ற வார்த்தையை அநேக இடங்களில் பார்க்கிறோம். ஜாதிச் சங்கம், ஊர்ச் சங்கம், தொழில் ரீதியான சங்கம் என பல சங்கங்கள். இப்படி மக்கள் பல்வேறு காரியங்களை மையமாகக்கொண்டு சங்கங்களை அமைக்கிறார்கள். ஆனால், தேவனுடைய மக்களாகிய நாம் எதைச்சுற்றி, எதை மையமாகக்கொண்டு, ஒரு சமுதாயமாக மாற்றப் பட்டிருக்கிறோம்? நாம் ஒரே கிறிஸ்துவை சுவாசிக்கிறோம், ஒரே கிறிஸ்துவைக் குடிக்கிறோம், ஒரே கிறிஸ்துவைப் புசிக்கின்றோம். ஒரே கிறிஸ்துவை அனுபவிக்கின்றோம், ஒரே கிறிஸ்துவால் வாழ் கின்றோம். "எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள், எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித் தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே" (1 கொரி. 10:3, 4) என்று பவுல் சொல்லுகிறார். இஸ்ரயேல் மக்களெல்லாரும் கிறிஸ்துவைப் புசித்தார்கள், கிறிஸ்துவைக் குடித்தார்கள்.

இஸ்ரயேல் மக்களெல்லாரும் வனாந்தரத்தில் பாளயம் அமைத்தார்கள். பாளயத்தின் நடுவில் தேவ னுடைய கூடாரம் இருந்தது. மூன்று கோத்திரங்கள் கிழக்குத் திசையிலும், மூன்று கோத்திரங்கள் தெற்குத் திசையிலும், மூன்று கோத்திரங்கள் மேற்குத் திசையிலும், மூன்று கோத்திரங்கள் வடக்குத் திசையிலும் பாளயமிறங்கினார்கள். பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் நடுவில் தேவனுடைய கூடா ரம் இருந்தது. இந்தக் கூடாரம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிற ஒரு முன்னடையாளம். எனவே, அவர்கள் கிறிஸ்துவை மையமாகக்கொண்டு தங்கள் கூடாரங்களை அமைத்தார்கள். கிறிஸ் துவை மையமாகக்கொண்டு அவர்கள் ஒரு சமுதாயமாக அமைக்கப்பட்டாகள். நாம் ஏன் ஒரு சமு தாயமாக இருக்க வேண்டும் என்றால் நாம் ஒரே கிறிஸ்துவை ஜீவனாகக் கொண்டிருக்கிறோம், அவரையே மையமாகக்கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவைவிட வேறு எந்தத் தளமும் பெரிய மையம் இல்லை. தேவனுடைய மக்களாகிய நாம் சில உபதேசங்களை அல்லது பழக்கவழக்கங்களைக் கொண்டு ஒரு சமுதாயமாகக் கட்டப்படக்கூடாது, அமைக்கப்படக்கூடாது. கிறிஸ்துவை மட்டுமே மையமாகக்கொண்டு நாம் ஒரு சமுதாயமாகக் கட்டப்பட வேண்டும்.

**பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற சமுதாயம்**

இரண்டாவது, நாம் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற ஒரு சமுதாயமாக இருக்க வேண்டும். ஒரு வேளை, கிறிஸ்துவே நம் மையம் என்பது நம் நடைமுறை வாழ்க்கையில் நமக்கு எப்படிப் பய னுள்ளது அல்லது நம் நடைமுறை வாழ்க்கையை எப்படிப் பாதிக்கிறது என்று தெரியாமல் போக

லாம். ஆனால், பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவது என்பது நம் நடைமுறை வாழ்க்கையைப் பாதிக்கும். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற சமுதாயம் என்றால் என்ன பொருள்? இதைப் புரிந்துகொள்வதற்கும் இஸ்ரயேல் மக்களையே எடுத்துக்காட்டாகக் கொள்வோம். அவர்கள் பாளயம் அமைத்திருக்கிறார்கள். எப்போது மேகம் எழும்பி நகர்ந்துபோகிறதோ அப்போது அவர்களும் தங்கள் கூடாரங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப்போக வேண்டும். எப்போது மேகம் நகராமல் நிற்கிறதோ அப்போது அவர்களும் நின்றுவிட வேண்டும். இதுதான் இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. மேகம் அசைந்துபோகும்போது அவர்களும் அசைந்து போக வேண்டும். மேகம் நிற்கும் போது அவர்களும் நிற்கவேண்டும். இது மிக எளிமையான வாழ்க்கை.

கிறிஸ்து அவர்களுடைய உணவாக இருந்தார். ஒவ்வொரு நாள் காலையிலும் அவர்கள் கிறிஸ்துவை உணவாகக் கொண்டார்கள். இந்த உலகத்து மக்களைப் பார்த்து நாம் நம் வாழ்க்கையை மிகவும் சிக்கலாக்கிக் கொள்ளுகிறோம். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற வாழ்க்கை மிகவும் எளிய வாழ்க்கை. மேகம் நகர்ந்து போகிறபோது நாமும் நகர்ந்துபோக வேண்டும். மேகம் நிற்கிறபோது நாமும் நிற்க வேண்டும். இந்த உலகத்து மக்கள் அளவுக்கு அதிகமாகத் திட்டமிடுகிறார்கள், அடுத்த வாரத்துக்கு, அடுத்த மாதத்திற்கு, அடுத்த வருடத்திற்கு. ஓய்வுபெற்றபின் எதிர்காலத்துக்கு, அடுத்த தலைமுறைக்கு என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள். இது சரியா தவறா என்று எந்தக் கருத்தையும் சொல்லவிரும்பவில்லை.

தேவனுடைய மக்களெல்லாரும் ஒரே திசையிலே, ஒரே இலக்கை நோக்கி, ஒரே வேகத்தில் நடக்க முடியுமா? நம் குணம், இயல்பு, சிந்தனைக்கோலங்கள் வெவ்வேறாக இருக்கின்றன. நாம் ஒருவ ரோடொருவர் மோதாமல், ஒரே இலக்கை நோக்கி, ஒரே திசையில், ஒரே வேகத்தில் செல்ல முடி யுமா? நாம் பரிசுத்த ஆவியினால் நடத்தப் பட்டால் நாமெல்லாரும் ஒரே இலக்கை நோக்கி, ஒரே திசையில், ஒரே வேகத்தில் நடப்போம். வெளியே இருந்து ஒரு சட்டதிட்டத்தைக் கொடுத்து நம்மை ஒரே திசையிலே, ஒரே வேகத்திலே, நடக்கச்சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

முதலாவது, தேவனுடைய மக்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட சமுதாயம். கிறிஸ்துவை மையமாக எடுத்துக்கொள்வதற்குப்பதிலாக ஓர் அமைப்புமுறையை மையமாக எடுக்கமுடியும். நிறு வனத்தை, ஸ்தாபனத்தை மையமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை மையமாகக் கொண்டு வாழ்கிற மக்கள் இருக்கிறார்கள். ஓர் அமைப்புமுறையில் வாழ்வதிலே பல பாதுகாப்புகளும், அநு கூலங்களும் உண்டு. வேலை, திருமணம், கல்லறைபோன்ற காரியங்கள் அங்கு சாதகமாக இருக் கும். ஆனால், கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழ்கிற சமுதாயத்தில் இப்படிப்பட்ட அநுகூலங் கள், பொதுவாக, கிடைக்காது. இரண்டாவது, நாம் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற ஒரு சமு தாயம். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவதற்குப்பதிலாக சட்டதிட்டங்களால் நடத்தப்படுவோம். சட்டதிட்டங்கள் கெட்ட சட்டதிட்டங்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நல்ல சட்டதிட்டங்களை நாம் வகுக்கலாம். சட்டதிட்டங்களைப் பின்பற்றிவிட்டு நாம் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிறோம் என்று சொல்லமுடியாது. பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவதென்றால் ஒரு வேளை ஒரு சகோதரன் ஒரு தேவையில் இருக்கிறான். இன்னொரு சகோதரன் அன்று காலை யில் ஜெபிக்கிறான். அவன் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் தேவையில் இருக்கும் சகோ தரனைப்பற்றி அவனுக்கு உணர்த்துவார். அவன் அந்த உணர்த்துதலைப் பின்பற்றி தேவையில் இருக்கும் சகோதரனைத் தொடர்புகொள்கிறான் அல்லது நேரில் போய்ச் சந்திக்கிறான். இது தேவ னுடைய மக்கள் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற வாழ்க்கை. இது மிகவும் எளிய வாழ்க்கை.

**பரிபூரணம் நிறைந்த சமுதாயம்**

மூன்றாவது, தேவ மக்களுடைய சமுதாயம் பரிபூரணம் நிறைந்த ஒரு சமுதாயம். அப்படியானால் அது முழுமையான, தவறு இல்லாத சமுதாயம் என்று பொருள் அல்ல. அங்கு நிறைவு இருக்கும். இயற்கையான வாழ்க்கையைப் பொறுத்தவரை தனியாக வாழ்வது எளிது. சமுதாயமாக வாழ்வது கடினம். இரண்டுபேர் கொண்ட சமுதாயத்துக்குப் பெயர் குடும்பம். சேர்ந்து வாழும்போது கஷ் டங்கள் வர ஆரம்பித்துவிடும். ஓர் அறையில் இரண்டு பேர் சேர்ந்து வாழும்போது பிரச்சினைகள் வரும். பரிபூரணம் என்றால் தனியாக வாழும்போது கிடைக்காத ஒரு கிறிஸ்துவை நாம் சமுதாய மாக வாழும்போது பெற முடியும், காண முடியும், கேட்க முடியும், அனுபவிக்க முடியும், அந்த ஆசீர்வாதத்தைப் பெற முடியும். நாம் தனியாக, தனித்து வாழும்போது காணமுடியாத கிறிஸ்துவை நாம் சமுதாயமாக வாழும்போது மிகப் பரிபூரணமான, மிக நிறைவான, போதுமான கிறிஸ்துவைக் காண முடியும். ஞானம் இல்லாதவன் தேவனுடைய மக்களுடைய சமுதாயத்தில் வாழும்போது தேவனுடைய மக்களிடமிருந்து தேவையான ஞானத்தைப் பெற்றுக்கொள்கிறான். “அன்றியும் பாலி

யத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளு கிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு" (2 தீமோ. 2:22) என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். "ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞான மடைவான். மூடருக்குத் தோழனோ நாசமடைவான்" (நீதி. 13:20). நீதியை, விசுவாசத்தை, அன்பை, சமாதானத்தை நாம் எப்படிக் கற்றுக்கொள்வது? தேவன் இதை நிபந்தனையாகக் கொடுத்திருக் கிறார் என்று நினைக்க வேண்டாம். "நீ சுத்த இருயத்தோடு என்னைத் தேடுபவர்களோடு சேர்ந்து ஒரு சமுதாயமாக வாழ்ந்தால் இவைகளை நான் உனக்குத் தருவேன். இல்லையென்றால் இவை களை நான் உனக்குத் தரமாட்டேன்," என்பதல்ல இதன் பொருள். நாம் தேவனுடைய மக்களாலான ஒரு சமுதாயத்தில் வாழும்போதுதான் நீதி என்றால் என்ன, சமாதானம் என்றால் என்ன, விசுவாசம் என்றால் என்ன, அன்பு என்றால் என்னவென்பதை நாம் காண்போம். எப்படிப் படிக்க வேண்டும், என்ன படிக்க வேண்டும், ஒரு வேலைக்கு எப்படி விண்ணப்பிக்க வேண்டும், எப்படி ஒரு வேலை யைச் செய்ய வேண்டும், எப்படி வருவாயைப் பெருக்க வேண்டும், எப்படி சேமிக்க வேண்டும், எப்படி ஒரு குடும்பத்தை அமைக்க வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பதையெல்லாம் தேவ மக்களுடைய சமுதாயத்தில் வாழும்போதுதான் நாம் பெறுவோம்.

இந்த உலகத்தில் சில சமுதாயங்கள் வளமான, வெற்றியுள்ள, செழிப்பான சமுதாயங்களாக இருக் கின்றன. அதற்குக் காரணம் அவர்களுடைய சமுதாயம். அவர்களுடைய சமுதாயத்திலிருந்து அவர்கள் அப்படிப்பட்ட ஞானத்தையும், அறிவையும், நற்பழக்கவழக்கங்களையும், கடின உழைப் பையும் பெற்றுக்கொள்கிறார்கள். பொருளாதாரத்தைக் குறித்து, உடல் நலத்தைக்குறித்து, அறிவைக் குறித்து, ஞானத்தைக்குறித்து, படிப்பைக்குறித்து, தொழிலைக்குறித்து, வருவாயைக்குறித்து அவர் களுக்கு ஞானம் இருக்கிறது. எங்கிருந்து அவர்கள் இந்த ஞானத்தைப் பெற்றார்கள்? அவர் களுடைய சமுதாயத்திலிருந்து அவைகளை அவர்கள் கற்றுக்கொண்டார்கள். அவர்களுடைய பெற் றோர்கள், உடன்பிறந்தவர்கள், உறவினர்கள், அவர்களுடைய குருக்கள்போன்றவர்களிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். தேவனுடைய மக்களுக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு இல்லை. ஏனென்றால் பவுல் சொல்வதுபோல், "சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள். மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை. வல்லவர்கள் அநேகரில்லை. பிரபுக்கள் அநேகரில்லை" (1 கொரி. 1:26). நம் குடும்பப் பின்னணி ஞானிகளும், வல்லவர்களும், பலவான்களும், பிரபுக்களும் உள்ள பின்னணி இல்லை. இவைகளை நாம் தேவ மக்களுடைய சமுதாயத்திலிருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும். தேவ மக்களுடைய சமுதாயத்தில் இது நம்மெல்லாருடைய பொறுப்பு. "ஞானி களோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்". எனக்கு ஞானம் இல்லாவிட்டால்கூட பரவாயில்லை. ஆனால், நான் ஞானம் நிறைந்த தேவ மக்களோடு வாழும்போது அவர்களிடமிருந்து நான் ஞானத் தைப் பெற்றுக்கொள்வேன். எனவே, தேவ மக்களுடைய சமுதாயத்தில் பரிபூரணம் உண்டு. கிறிஸ் துவை நம் ஞானமாக, நீதியாக, விசுவாசமாக, அன்பாக, சமாதானமாக, எந்தப் புத்தகத்திலும் படிக்க முடியாத காரியத்தை, தனியாக அமர்ந்து புத்தகங்களை ஆராய்ச்சி செய்து படிக்கமுடியாத காரி யத்தை, தேவ மக்களோடு சேர்ந்து சமுதாயமாக வாழ்வதால் கற்றுக்கொள்ள முடியும்.

## பொறுப்புள்ள சமுதாயம்

நான்காவது, தேவ மக்களுடைய சமுதாயம் பொறுப்புள்ள சமுதாயம். நான் சில கிறிஸ்தவர்களைப் பற்றிச் சொன்னேன். அவர்கள் ஞாயிற்றுக்கிழமை கூட்டத்துக்குப் போவார்கள். அங்கு இருக்கும் இருக்கையில் போய் அமர்வார்கள். பாடுவது, பேசுவது, வேத வசனங்களை மேற்கோள் காட்டுவது, வாசிப்பது, பிரசங்கம்பண்ணுவதுபோன்ற எல்லாவற்றையும் வேறு யாரோ செய்வார்கள். இவர் அங்கு அமர்ந்து அந்தக் காட்சியை அனுபவிப்பார், ரசிப்பார். இரண்டு அல்லது மூன்று மணி நேரக் காட்சிக்குப்பின் எழுந்து போய்விடுவார். இவருக்கு நான் கொடுக்கிற பெயர் 'பொறுப்பற்ற நபர்'.

பொறுப்பு என்றால் என்ன? தேவனுடைய மக்களைப்பற்றி நமக்கு அக்கறை இருக்க வேண்டும். மற்ற சகோதர சகோதரிகளைப்பற்றிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. தேவன் அந்தப் பொறுப்பை நம்மிடம் கொடுத்திருக்கிறார். அந்தப் பொறுப்பைப்பற்றிய ஓர் ஒப்புவிப்பு நமக்கு இருக்க வேண்டும். நம் பொறுப்பு என்னவென்று யாரும் வெளியேயிருந்து வரையறுப்பதில்லை. "ஆண்டவரே, தேவ மக்களாலான இந்தச் சமுதாயத்திலே என் பொறுப்பு என்ன?" என்று நாம் தேவனிடம் கேட்க வேண் டும். இந்தப் பொறுப்பு, ஒருவேளை, ஒரு வாக்கியம் ஜெபிப்பதாக இருக்கலாம் அல்லது கூடுகைக்கு ஒரு பாடல் கொண்டுவருவதாக இருக்கலாம். ஞாயிற்றுக்கிழமை கூடுகையை நான் ஒரு பொறுப் பாக நினைக்கிறேன். "தேவனுடைய மக்கள் கூடிவரும்போது கிறிஸ்துவுக்குரியதை நாம் அவர்களுக் குக் கொடுக்க வேண்டும். கிறிஸ்துவுக்குரியவை நம்மிடம் இருக்க வேண்டும். பிறருக்குக் கொடுப்

பதற்கென்று நாம் வைத்திருக்க வேண்டும். கொடுப்பதற்கு நம் கைகள் நிறைந்திருக்க வேண்டும். நாம் ஆயத்தம் பண்ணாவிட்டால் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு நம் கைகளில் ஒன்றும் இருக் காது. ஒரு சிலவற்றையாவது நாம் தேவனுடைய மக்களுக்குக் கொடுப்பதற்கு ஆயத்தம்பண்ணி வைத்திருக்க வேண்டும். அது ஒரு வாக்கியம் ஜெபமாக இருக்கலாம். நாம் கூடிவரும்போது. “ஆண்டவரே, நீர் நான் நம்பத்தக்க இரட்சகராக இருக்கிறீரே, உமக்கு நன்றி,” என்று நீங்கள் வாயைத் திறந்து ஒரு வாக்கியம் ஜெபித்தால் நீங்கள் கிறிஸ்துவை மற்றவர்களுக்குக் கொடுக் கிறீர்கள். நீங்கள் அந்தப் பொறுப்பை எடுத்துக்கொள்ளுகிறீர்கள். இது நான்காவது காரியம்-பொறுப் பும், ஒப்புவிப்பும். ஒப்புவிப்பு என்றால் இந்தப் பொறுப்பை நான் கட்டாயமாக நிறைவேற்றியாக வேண்டும் என்று பொருள். “விருப்பம் இருந்தால் செய்வேன், விருப்பம் இல்லாவிட்டால் செய்யமாட் டேன். வசதிப்பட்டால் செய்வேன், வசதிப்படாவிட்டால் செய்யமாட்டேன்” என்பதல்ல. “சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கும் கடமை என்மேல் விழுந்திருக்கிறது. அது என்மேல் சுமத்தப்பட்டிருக்கிறது.” (1 கொரி. 9:16) “அது எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது” என்று பவுல் சொல்லுகிறார். “பவுல்போன்ற பெரிய ஆட்களுக்குத்தான் இந்தக் கடமையும், பொறுப்பும், உக்கிராணத்துவமும் உண்டு. என்னைப் போன்றவர்களுக்குக் கிடையாது,” என்று நாம் நினைக்கக்கூடாது.

### பரிவுள்ள சமுதாயம்

ஐந்தாவது, தேவ மக்களுடைய சமுதாயம் பரிவுள்ள சமுதாயம். பரிவுள்ள சமுதாயம் என்றால் என்ன பொருள் என்பதைப் புரிந்துகொள்ள 1 கொரிந்தியர் 12யை நீங்கள் வாசிக்க வேண்டும். “சரீ ரத்திலே பிரிவினையுண்டாயிராமல் அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும் படிக்கு தேவன் கனத்தில் குறையுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து இப்படிச் சரீரத்தை அமைத் திருக்கிறார்” (1 கொரி. 12:25). அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு என்றால் அக்கறையாயிருக்கும்படிக்கு, கரிசனையாயிருக்கும்படிக்கு, பரிவும் உணர்வும் உள்ளவர் களாயிருக்கும்படிக்கு என்று பொருள். பவுல் இதை அடுத்த வசனத்தில் விளக்குகிறார். “ஒரு அவ யவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்” (1 கொரி. 12:26). ஒரு சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவது என்பது எளிதான காரியம் அல்ல. ஒவ்வொரு கல்லாக எடுத்துவைத்து நாம் வீட்டைக் கட்டுகிறோம். அதுபோல் தேவ மக்களுடைய சமுதாயம் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஞாயிற்றுக் கிழமை கூடுகையில் அதைப்பற்றிய ஓர் உணர்வு, தேவனுடைய மக்களைப்பற்றிய ஓர் உணர்வு, இருக்க வேண்டும். அவர்கள் துன்பப்படுகிறார்கள் அல்லது மகிழ்ச்சியாயிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய ஓர் உணர்வு இருக்க வேண்டும். எப்போதும் நம்முடைய துன்பத்தையும், மகிழ்ச்சியையும் நினைத்துக்கொண்டிருக்கக் கூடாது. நம்மையும், நம் இன்ப துன்பத்தையும் மையமாகக்கொண்டு வாழ் வது நம் இயற்கை. இதிலிருந்து பரிசுத்த ஆவியானவர் நம்மை இரட்சிக்க வேண்டும். 1 கொரிந் தியர் 12ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். தேவனுடைய மக்களைப்பற்றிய ஓர் உணர்வும், அக்கறையும். பரிவும், கரிசனையும் நமக்கு இருக்க வேண்டும். தேவ மக்களின் நிலை என்ன? இயல் பாக, இயற்கையாக. எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி அப்படிப்பட்ட உணர்வும், அக்கறையும், பரி வும், கரிசனையும் தேவனுடைய மக்களைப்பற்றி நம் இருதயத்தில் உண்டாக வேண்டும். இதற்காக நாம் ஜெபிக்க வேண்டும். “ஆண்டவரே, தேவனுடைய மக்களைப்பற்றி உணர்வும், அக்கறையும், கரிசனையும், பரிவும் உள்ள ஒரு மனிதனாக நான் இருக்க விரும்புகிறேன். அதை எனக்குள் உருவாக்கும்”.

### பகிர்ந்துகொள்கிற சமுதாயம்

ஆறாவது, பகிர்ந்துகொள்கிற சமுதாயம். 2 கொரிந்தியர் 8, 9ஆம் அதிகாரங்களைப் பல தடவை வாசித்துப் பாருங்கள். ஆதியில் விசுவாசிகள் எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித் தார்கள் என்று அப்போஸ்தலர் நடபடிகளில் நாம் வாசிக்கிறோம். “விசுவாசிகளாகிய திரளான கூட் டத்தார் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவை களில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந் தது... அவனவனுடைய தேவைக்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக் கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை” (அப். 4:32, 36). ஆனால், கொஞ்சக் காலம் கழிந்தபின் அவர்கள் எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவிக்கவில்லை. அவரவர் தங்களுடையதை தாங்களே வைத்திருந்தார்கள். தேவனுடைய மக்கள் நாம் நூறுபேர் கூடி வாழ்கிறோம் என்று வைத் துக்கொள்வோம். நம்முடைய வளங்கள் இருக்கின்றன. நேரம், பணம், உழைப்பு. எல்லாரிடமும் வளங்கள் சமமாக இருப்பதில்லை. ஒருவருக்கு நேரம் கொஞ்சம் அதிகமாக இருக்கலாம், இன்

னொருவருக்குக் குறைவாக இருக்கலாம். ஒருவருக்கு ஞானம் அதிகமாக இருக்கலாம், இன்னொரு வருக்குக் குறைவாக இருக்கலாம். ஒருவருக்கு வருவாய் அதிகமாக இருக்கலாம், இன்னொருவருக் குக் குறைவாக இருக்கலாம். இப்படி நமக்குள் ஏற்றத் தாழ்வுகள் இருக்கும். "தரித்திரர் எப்போதும் உங்களிடையே இருக்கிறார்கள்" (மாற்கு 14:7).

நம்மெல்லாருக்கும் ஒரேவிதமான வரங்களும் இல்லை, வளங்களும் இல்லை. தராசில் இரண்டு தட்டுகள் இருக்கும். இருபது தட்டுகள் இருக்கிற ஒரு தராசைக் கற்பனைசெய்துகொள்ளுங்கள். அதைத் தூக்கிப் பிடித்தால் ஒரு தட்டு மேலே இருக்கும். இன்னொரு தட்டு கீழே இருக்கும். இத்தனை தட்டுகளை சமநிலைக்குக் கொண்டு வருவது எப்படி? எல்லாருக்கும் சமமாக இருக்கும் படி எப்படிப் பகிர்ந்துகொள்வது? 20 தட்டுகள் உள்ள இந்தத் தராசை சமநிலைப்படுத்தமுடியுமா? மனிதர்களால் முடியாது. ஆனால், பரிசுத்த ஆவியானவர் செய்வார். "சமநிலைப் பிரமாணம்" என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்துகிறார். ஒரு சமுதாயத்தில் இருக்கிற வளங்களை மக்கள் எல்லா ருக்கும் போதுமான அளவுக்குப் பகிர்ந்துகொடுக்க வேண்டுமாம். பொருளாதாரத்தில் இப்படி ஒரு காரியம் இருக்கிறதாம்.

தேவ மக்களாலான சமுதாயம் இப்படி பகிர்ந்துகொடுக்கிற சமுதாயமாக இருக்க வேண்டும். "அவன் வன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாக மாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி. 9:7). பகிர்ந்துகொள்ளுவது என்றால் பணத்தை மட்டுமே பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைக்காதீர்கள். நான்குபேர் செய்யவேண்டிய வேலை இருக்கிறது. நான்கு பேருடைய உழைப்பு, ஒருமைப்பாடு, இசைவு, ஒருங் கிணைப்பு இருந்தால்தான் ஒரு வேலை நடக்கும் என்று வைத்துக்கொள்வோம். அதில் நாம் பங்கு பெறும்போது நாம் பகிர்ந்துகொள்கிறோம். இதுதான் பகிர்ந்துகொள்ளுதல். இது இந்த உலகத்தில் மிகவும் அபூர்வமானது. பகிர்ந்துகொள்ளாததால் தேவனுடைய பிள்ளைகள் பல பொறுப்புகளை நிறைவேற்றுவதில்லை.

## பொறுமையுள்ள சமுதாயம்

தேவனுடைய மக்கள் பலர் நேர்த்தியான சமுதாய வாழ்க்கை வாழ மாட்டார்கள். அவர்கள் பொறுப்பை எடுக்கமாட்டார்கள். பிறரைக் குறித்த அக்கறையோ, கரிசனையோ, பரிவோ, உணர்வோ அவர் களுக்கு இருக்காது. அவர்கள் பகிர்ந்துகொள்ளமாட்டார்கள். அவர்களை என்ன செய்வது? பொறுமை யோடு நாம் அவர்களை சுமக்க வேண்டும், தாங்கிக்கொள்ள வேண்டும், சகித்துக்கொள்ள வேண்டும் என்று கலாத்தியர் 6ஆம் அதிகாரத்தில் பவுல் கூறுகிறார். "பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரிய மாய் நடவாமல், பலவீனருடைய பலவீனத்தைத் தாங்க வேண்டும்" (ரோமர் 15:1). "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா. 6:2).

பேசுவது எல்லாருக்கும் இயல்பாக வராது. ஆனால், ஒரு வாக்கியம் சொல்லி ஜெபிக்க முடியுமே! அப்படி ஜெபிக்கவில்லையென்றால் நீங்கள் மிகவும் பலவீனர். நீங்கள் உங்கள் பொறுப்பை நிறை வேற்றவில்லை என்று பொருள். தேவனுடைய மக்களைப் பொறுமையோடு தாங்க வேண்டும். ஜெபிக்காதவர்களைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும். ஒரு சமுதாயம் என்றால் அப் படித்தான் இருப்பார்கள்.

"கிறிஸ்துவை மையமாகக் கொண்ட சமுதாயம். பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுகிற சமுதாயம். பரிபூரணம் நிறைந்த ஒரு சமுதாயம். பரிவுள்ள சமுதாயம். பொறுப்புள்ள சமுதாயம், பகிர்ந்து கொள்ளுகிற சமுதாயம், பொறுமையுள்ள சமுதாயம் என்று சொன்னீர்களே. அப்படியானால் இங்கு யாரும் தலைவர்கள் இல்லையா?" தலைவர்கள் இல்லை. ஆனால், நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப் படிய வேண்டும். ஒரு சிலர் சமுதாயம் என்கிற பெயரில் தேவனுடைய மக்களை அடிமைப்படுத்து கிறார்கள். ஆனால், நாம் யாரையும் அடிமைப்படுத்தக் கூடாது. அடிமைப்படுத்துவது ஓர் அற்றம் என்றால் பொறுப்பற்றிருப்பது இன்னொரு அற்றம்.

உங்கள் அலுவலகத்தில் நீங்கள் ஒரு வேலையைச் செய்ய வேண்டும் என்று உங்கள் அதிகாரி சொன்னால் அதைச் செய்வீர்களா? ஆனால், தேவனுடைய மக்கள் மத்தியில் அப்படிப்பட்ட கீழ்ப் படிதல் இல்லை. "ஜெபியுங்கள், பாடல் கொண்டுவாருங்கள், பாடுங்கள், பகிர்ந்துகொள்ளுங்கள்" என்று சொன்னால் அவ்வளவு எளிதில் நாம் கீழ்ப்படிவதில்லை. ஏனென்றால், இது தேவனுடைய குடும்பம். இங்கு கீழ்ப்படியாவிட்டால் யாரும் தண்டனை தரப்போவதில்லை. நேர்முகமாகவும் தண் டனை இல்லை. மறைமுகமாகவும் தண்டனை இல்லை. தேவனுடைய மக்களாலான சமுதாயத்தில் நாம் யாரையும் அச்சுறுத்துவதில்லை. அப்படிப்பட்ட அச்சுறுத்தல் இருக்கக் கூடாது. தேவனுடைய

மக்கள் பயமின்றி வாழ வேண்டும். ஆனால், அதே சமயத்தில் "ஆண்டவரே, நீர் தருகின்ற பொறுப்புகளை எந்தவித தேவ பயமின்றி நான் தட்டிக்கழிக்க விரும்பவில்லை," என்பது நம் மனப் பாங்காக இருக்க வேண்டும். சமுதாயம் என்பது நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து அடங்க வேண்டும். ஒருபக்கம் நாம் யாருக்கும் அடிமை இல்லை. சமுதாயத்தில் அடிமைத்தனம் இல்லை. இன்னொரு பக்கம் நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து அடங்க வேண்டும்.

தேவனுடைய மக்களால் முடியாத ஒன்றைக் கேட்டு, அவர்களை நான் துன்பத்துக்கு ஆளாக்கு கிறேனோ? அவர்களால் முடியாத ஒன்றைச் செய்யச் சொல்லுகிறேனோ என்று நான் நினைப்ப துண்டு. இது உங்களால் முடியாத காரியமா? உங்களால் பேச முடியவில்லையென்றால் நீங்கள் ஜெபியுங்கள். ஒரு பாடலைத் தெரிந்துகொண்டு வாருங்கள். இது முடியுமா முடியாதா? ஐந்து வாக் கியங்களைக் கொண்டு வாருங்கள். "இந்த வசனத்தை வாசித்தேன். அந்த வசனம் எனக்குப் பயனுள்ளதாயிருந்தது," என்று சொல்லுங்கள்.

நம் கூடுகைகளை நீங்கள் அற்பமாக நினைக்காதீர்கள். தேவ மக்களுடைய சமுதாயத்தைக் கட்டி யெழுப்புவதற்கு நாம் செய்கிற எல்லா முயற்சிகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம். நாம் பொறுமையோடு இந்தச் சமுதாயத்தைக் கட்டியெழுப்பு வோமென்றால் மாபெரும் ஆசீர்வாதத்தை நாம் மற்றவர்களுக்குக் கொண்டுசெல்கிறோம்.

ஞாயிற்றுக்கிழைமை கூடுகை நன்றாக இருக்க வேண்டும் என்பதை மனதில்வைத்து நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், உண்மையிலே தேவனுடைய மக்களுடைய சமுதாயம் கட்டியெழுப்பப் படுகிறது என்றால் ஞாயிற்றுக்கிழமை கூடுகையும் மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும். நாம் வருவது, வராமல் இருப்பது, நாம் பேசுவது பேசாமல் இருப்பது, நாம் ஒரு பாடலைக் கொண்டுவருவது அல்லது கொண்டுவராமலிருப்பது, தேவனுடைய பிள்ளைகளோடு நாம் உரையாடுவது, உரையாடா மலிருப்பது எல்லாமே தேவ மக்களாலான சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் அல்லது கட்டியெழுப்பு வதைத் தடுக்கும்.

தேவ மக்களாலான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது தானாகவே நடைபெறாது அல்லது ஒன் றிரண்டுபேர் பேசுவதால் நடைபெறாது. எருசலேமின் மதில் சுவரைக் கட்டுவதற்கு ஒவ்வொருவரும் தன்தன் பங்கைச் செய்ததுபோல் நாமெல்லாரும் நம் பங்கைச் செய்ய வேண்டும். அதில் பங்கு பெற்றவர்களின் பட்டியல் தேவனுடைய கையில் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். இதை நீங்கள் எச்சரிக்கையோடும், பயபக்தியோடும் ஏற்றுக்கொள்ளுங்கள். தேவ மக்களுடைய சமுதாயத் தில், தேவனுடைய குடும்பத்தில், நானும் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறேன். நான் தேவனுடைய குடும் பத்தில் இருக்கிறேன். அவர்களைப்பற்றி எனக்குப் பொறுப்பு இருக்கிறது. பரிவு இருக்கிறது. பகிர்ந்து கொள்ளுதல் இருக்கிறது. பொறுமை இருக்கிறது. இவைகள் உருவாக வேண்டும். அப்போதுதான் நாம் போவதற்குப் பெயர் 'சபை'. பாட்டு இருக்கிறது, பெரிய திரை இருக்கிறது, பிரசங்கம் இருக் கிறது, காணிக்கை இருக்கிறது என்பதால் அது சபை அல்ல. ஆனால், பொறுப்பு இருக்கிறது. பரிவு இருக்கிறது, பகிர்ந்துகொள்ளுதல் இருக்கிறது, பொறுமை இருக்கிறது. அங்கு சமுதாயம் உருவாக் கப்பட்டிருக்கிறது. இதைச் செய்வதற்குத் தேவன் நமக்கு ஞானத்தை அருள்வாராக.